பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

28 09 2024 **SATURDAY** 6 45 **AM**

வணக்கம். மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பெட்ரோல் மற்றும் டீசலை சரக்கு மற்றும் சேவை வரிக்குள் கொண்டு வருவது தொடர்பாக, ஒருமித்த கருத்து அவசியம் என்று பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் பூரி கூறியுள்ளார்.

2. கடந்த ஏழு ஆண்டுகளில், நாட்டில் பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை இருமடங்காக அதிகரித்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

3. விவசாயிகள் தரமான சான்று பெற்ற விதைகளையே பயன்படுத்த வேண்டும் என்று வேளாண் அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தமிழக அரசு திட்டங்களை பிற மாநிலங்களும் செயல்படுத்தி வருவதாக மாநில செய்தித்துறை அமைச்சர் திரு. மு.,பெ. சாமிநாதன் கூறியுள்ளார்.

5. **Macau** ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின், மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் **Treesa Jolly – Gayathri Gopichand** இணை இன்று தைவான் இணையை எதிர்கொள்கிறது.

**>>>>><<<<<**

பெட்ரோல் மற்றும் டீசலை சரக்கு மற்றும் சேவை வரிக்குள் கொண்டு வருவது தொடர்பாக, ஒருமித்த கருத்து உருவாவது அவசியம் என்று மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் பூரி கூறியுள்ளார்.

புனே-யில் நேற்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பெட்ரோல் மற்றும் டீசலை, சரக்கு மற்றும் சேவை வரி வரம்பிற்குள் கொண்டு வருவது குறித்து தாம் மட்டுமல்ல, மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமனும் பலமுறை வலியுறுத்தி வருவதாக கூறினார்.

இதுதொடர்பாக ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் விவாதிக்க வேண்டும் என்று கேரள உயர்நீதிமன்றம் யோசனை ஒன்றை தெரிவித்தது என்றும், ஆனால் அதனை அம்மாநில நிதியமைச்சர் ஏற்றுக்கொள்வில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

பெட்ரோல் மற்றும் டீசல் மீது விதிக்கப்படும் வரிகளால் மாநிலங்களுக்கு கிடைக்கும் வருவாயை அவை விட்டுத்தர தயாராக இல்லை என்றும் அவர் கூறினார்.

ஒருமித்த கருத்து ஏற்பட்டால் மட்டுமே, பெட்ரோல் மற்றும் டீசலை சரக்கு மற்றும் சேவை வரியின் கீழ் கொண்டு வர முடியும் என்றும் திரு. ஹர்தீப்சிங் பூரி தெரிவித்தார்.

>>>>><<<<<

கடந்த ஏழு ஆண்டுகளில், நாட்டில் பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை இருமடங்காக அதிகரித்துள்ளதாகவும், இது மௌனப்புரட்சி என்றும் மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில், பல்வேறு துறைகளில் பெண்கள் பணிபுரிந்து வருவதாகவும், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு, மகளிருக்கு உரிய வாய்ப்புகளை வழங்கி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மிகுந்த பொறுப்புணர்வுடனும், தடைகளை தாண்டியும் மகளிர் பல்வேறு துறைகளில் சாதனை படைத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமரின் முத்ரா திட்டம், திறன் இந்தியா திட்டம் உள்ளிட்டவை தொழில்நிறுவனங்கல் பெண்களின் பங்களிப்பை அதிகரித்துள்ளது என்றும் பல இடங்களில் பெண்கள் ஆண்களைவிட அதிக நேரம் பணிபுரிந்து வருவதாகவும் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

>>>>><<<<<

விவசாயிகள் தரமான சான்று பெற்ற விதைகளையே பயன்படுத்த வேண்டும் என்று வேளாண் அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று நடைபெற்ற விதைச்சான்றளிப்பு, உயிர்ம சான்றளிப்பு துறைக்கான ஆய்வுக்கூட்டத்தில் பேசிய அவர், மாவட்டங்களில் வேளாண் துறை அதிகாரிகள் விதை அமலாக்கச் சட்டத்தை தீவிரமாக செயல்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

தரமற்ற விதைகள், விவசாயிகளுக்கு சென்றடைவதை தடுத்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

தரமற்ற விதைகளை விற்பனை செய்வோர் மீது விதைச் சட்டங்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கூறினார்.

>>>>><<<<<

தமிழக அரசு திட்டங்களை பிற மாநிலங்களும் செயல்படுத்தி வருவதாக மாநில செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் கூறியுள்ளார்.

நெல்லை மாவட்டம், பாளையங்கோட்டையில் நேற்று அரசு பொருட்காட்சியை தொடங்கி வைத்துப் பேசிய அவர், தேர்தல் காலத்தின் போது திமுக அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

ஏராளமான முன்னணி தொழில் நிறுவனங்கள் தமிழகத்தில் தொழில் தொடங்கியுள்ளதாகவும், பிற மாநிலங்களுடன் ஒப்பிடும் போது, தமிழகத்தில் தனிநபர் வருமானம் அதிகமாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

முன்னதாக, ஒரு கோடியே 52 லட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் வழங்கினார்.

>>>>><<<<<

இயற்கை விவசாயத்தில் ஈடுபட்டு வந்த கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் அருகேயுள்ள தேக்கம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பாப்பம்மாள் என்ற மூதாட்டி நேற்று காலமானார்.

அவருக்கு வயது 110.

சிறுவயதில் பெற்றோரை இழந்த அவர், இயற்கை விவசாயத்தின் மீது ஆர்வம் கொண்டு அதில் ஈடுபட தொடங்கினார்.

அவரது ஆர்வத்தை பாராட்டும் வகையில், கடந்த 2021ஆம் ஆண்டு மத்திய அரசு பத்மஸ்ரீ விருது வழங்கி கௌரவித்தது.

பாப்பம்மாள் மறைவுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவரது மறைவு மிகுந்த வேதனையளிப்பதாக சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், இயற்கை விவசாயத்தில் முத்திரை பதித்தவர் அவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

1970ஆம் ஆண்டு தொடங்கி, 45 ஆண்டுகாலம் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக உழவர் விவாதக்குழு உறுப்பினராக செயல்பட்டவர் மறைந்த பாப்பம்மாள் என்று தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், பிஜேபி மாநிலத்தலைவர் திரு. அண்ணாமலை, பாமக தலைவர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் உள்ளிட்ட பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

>>>>><<<<<

செஞ்சிக்கோட்டையில் யுனெஸ்கோ பிரதிநிதிகள் நேற்று நேரில் ஆய்வு மேற்கொண்டனர்.

உலக அளவில் மிகவும் புராதனமான இடங்களை யுனெஸ்கோ குழு ஆய்வு செய்து, உலக பாரம்பரிய சின்னமாக அறிவித்து வருகிறது.

தமிழகத்தில், தஞ்சை பிரகதீஸ்வரர் கோவில், கங்கைகொண்ட சோழபுரம் கோவில், மாமல்லபுரம் சிற்பங்கள், மேற்குத்தொடர்ச்சி மலையில் இயக்கப்படும் நீலகிரி மலைரயில், கும்பகோணம் ஐராதீஸ்வரர் கோவில் உள்ளிட்டவை பாரம்பரிய நினைவுச் சின்னங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், செஞ்சிக்கோட்டையை உலகின் பாரம்பரிய சின்னமாக அறிவிப்பது குறித்து, நேற்று யுனெஸ்கோ பிரதிநிதிகள் ஆய்வு செய்தனர்.

பலநூறு ஆண்டுகளுக்குப் பிறகும், செஞ்சிக்கோட்டை வலுவாக இருப்பதாக ஆய்வுக்குழுவினர் தெரிவித்ததாக, மாநில அமைச்சர் திரு. செஞ்சி மஸ்தான் கூறினார்.

இந்த ஆய்வின்போது உடனிருந்த அவர், பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

(வாய்ஸ் பைட் - செஞ்சி மஸ்தான் 40 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

கேரளாவில் ஏடிஎம் மையத்தில் கொள்ளையடித்த ஹரியானா மாநிலத்தைச் சேர்ந்த கொள்ளையர்கள், தமிழக காவல்துறையினரால் நேற்று நாமக்கல் மாவட்டத்தில் கைது செய்யப்பட்டனர்.

அப்போது கொள்ளையர்களுடன் ஏற்பட்ட மோதலின் போது, காவல்துறையினர் துப்பாக்கியால் சுட்டதில், ஒருவர் உயிரிழந்தார்.

இந்நிலையில், மோதல் நிகழ்ந்த இடத்தை குமாரப்பாளையம் குற்றவியல் நீதிமன்ற நீதிபதி மாலதி நேற்று பார்வையிட்டார். அங்கிருந்த காவல்துறையினருடன் நடந்த சம்பவம் குறித்து கேட்டறிந்தார்.

கைது செய்யப்பட்டு, நாமக்கல் மாவட்டம், வெப்படை காவல்நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள ஹரியானா மாநிலத்தைச் சேர்ந்த ஏடிஎம் கொள்ளையர்கள் ஐந்து பேரிடம், தமிழ்நாடு, ஆந்திரா மற்றும் கேரள மாநில காவல்துறையினர் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இன்று அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

>>>>><<<<<

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடி மற்றும் மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கோவை மாவட்ட மலைப்பகுதிகள், வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, திருச்சி, நீலகிரி, ஈரோடு உள்ளிட்ட 19 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

>>>>><<<<<

இருவரிச் செய்திகள்

பாகிஸ்தானில் காவல்நிலையம் ஒன்றில் நேற்று ஏற்பட்ட குண்டுவெடிப்பில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

>>>>><<<<<

நேபாளத்தில் தொடர்மழை காரணமாக, பெரும்பாலான நதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

>>>>><<<<<

ஜம்மு காஷ்மீரில் **Reasi** மற்றும் ரஜோரி மாவட்டத்தில் யாத்திரிகர்கள்மீது நிகழ்ந்த தீவிரவாத தாக்குதல் குறித்து தேசிய புலனாய்வு முகமை நேற்று பல்வேறு இடங்களில் திடீர் சோதனை நடத்தியது.

>>>>><<<<<

விருதுநகரில் மரமும், மரபும் என்ற தலைப்பில் புத்தக திருவிழாவை மாநில அமைச்சர்கள் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், திரு. தங்கம் தென்னரசு ஆகியோர் நேற்று தொடங்கி வைத்தனர்.

>>>>><<<<<

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் திரு. ஜோ. அருண் தலைமையில் சிறுபான்மையின மக்களுக்கு செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது.

>>>>><<<<<

தேனி மாவட்ட நிர்வாகம் மற்றும் சுற்றுலாத்துறையின் சார்பில் சுருளி அருவியில் சாரல் திருவிழா இன்று முதல் அடுத்த மாதம் 2ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

>>>>><<<<<

மயிலாடுதுறை தலைமை அஞ்சலகத்தில் தூய்மை இந்தியா திட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இதையொட்டி, அஞ்சலக ஊழியர்களுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன.

>>>>><<<<<

சென்னை கடற்கரையிலிருந்து திருத்தணி-ஆவடி வழித்தடத்தில் இயக்கப்படும் புறநகர் மின்சார ரயில்கள் இன்று கடற்கரை ரயில் நிலையத்திற்குப் பதிலாக, வியாசர்பாடி ஜீவா ரயில் நிலையத்திலிருந்து இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

**Macau** ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின், மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் **Treesa Jolly – Gayathri Gopichand** இணை இன்று தைவான் இணையான **Hsieh Pei – Hung En** இணையை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் கோவா அணி, 3-2 என்ற கோல்கணக்கில் ஈஸ்ட் பெங்கால் அணியை வென்றது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பெங்களூரு - மோகன் பஹான் அணியை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

மன்னார்குடியை அடுத்த வடுவூரில் மாநில அளவிலான ஆடவர் - மகளிர் வலுதூக்கும் போட்டி நேற்று தொடங்கியது.

மூன்று நாட்கள் நடைபெறும்இப்போட்டியில் 360க்கும் மேற்பட்ட வீரர் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

>>>>>END<<<<<